10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 02 | அதிர்வு 16 | புதன்கிழமை 16 மே 2018 | ethirolimedia@gmail.com | 021 224 38 18

## பஸ் கட்டணமும் அதிகரித்தது!

கொழும்பு, மே 16

பஸ் கட்டணம் நேற்று நள்ளிரவு முதல் 6.56 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனினும் குறைந்தபட்ச கட்டண தொகையில் அதிகரிப்பு செய்யப்படவில்லையென சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார கூறியுள்ளார்.

நேற்று காலை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. 06▶



## தனியார் பஸ்கள் போராட்டத்தில்

கொழும்பு, மே 16

இன்று நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக அனைத்து மாகாண தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

20 சதவீதத்தால் பஸ் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், குறைந்தபட்ச கட்டணத்தை 15 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என்றும் அந்த சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

எவ்வாறாயினும் 6.56 வீதத்தால் பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்கும், குறைந்தபட்ச கட்டண தொகையில் அதிகரிப்பு செய்யாதிருப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. 06▶



# இரணைதீவு மக்களுக்கு வெற்றி

இரணைதீவு, மே 16

இரணைதீவில் மக்கள் தங்களின் சொந்த காணிகளில் மீள்குடியேறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மீள்குடியேற்றம் புனர்வாழ்வு வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி. சுரேஸ் அறிவித்துள்ளார். 06▶

## தேவையற்ற வரியால் விலை உயர்வு

ஜே.வி.பி குற்றச்சாட்டு



கொழும்பு, மே 16

அரசாங்கம் வீணாக வரிகளை அறவிட்டு எரிபொருள் விலைகளை அதிகரித்துள்ளதாகவும் இது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்லவெனவும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அந்த கட்சியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் இதனை தெரிவித்துள்ளார். 06▶

## மயக்க மருந்து தூவி நகை, பணம் கொள்ளை

வவுனியா, மே 16

வவுனியா பசார் வீதியில் பொருட் கொள்வனவுக்காக சென்ற வயோதிப பெண்ணிடம் மயக்க மருந்தை தூவி அவர் அணிந்திருந்த நகை மற்றும் பணம் என்பவற்றை கொள்ளையிட்டு சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா பசார் வீதியில் உள்ள கடையொன்றில் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக நடந்து சென்ற வயோதிபப் பெண்ணிடம் கைக்குட்டையில் சுற்றப்பட்டிருந்த கல் ஒன்றினைக் காட்டி அது தொடர்பாக பெண் ஒருவரும், ஆண் ஒருவரும் வினவியுள்ளனர்.

குறித்த பெண்மணியும் அவர்களிற்கு பதில் கூற முற்பட்ட போது குறித்த கைக்குட்டையினை திடீரென முகத்தில் அழுத்தி மயக்கமடைய செய்து அவர் அணிந்திருந்த நான்கரைப் பவுண் தங்கச் சங்கிலி, ஒன்றரைப் பவுண் மோதிரம், கைப்பையில் இருந்த எண்பதாயிரம் ரூபா பணத்தினையும் 06▶

# நினைவேந்தலுக்கு அணிதிரளுங்கள்

முதலமைச்சர் அழைப்பு



யாழ்ப்பாணம், மே 16

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினமன்று எமது தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் முள்ளிவாய்க்காலுக்கு எம்மவரை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

அன்றையநாள் துக்க தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அன்றைய தினம் அரைநாள் கடை அடைப்புக்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். அனைவரும் தாம் இருக்குமிடத்தில் முற்பகல் 11 மணிக்கு 2 நிமிட மௌன அஞ்சலியை செலுத்தவேண்டும்" 06▶

## வேற்றுமைகளை மறந்து அஞ்சலிப்போம்

யாழ்ப்பாணம், மே 16

போரில் படுகொலை செய்யப்பட்ட எம் தமிழ் உறவுகளுக்கு வேற்றுமைகளை மறந்து அஞ்சலி செலுத்துவோம் என அழைப்பு விடுத்துள்ளது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம். தமிழர்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டு, பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்து ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்து உறவுகள் அழிக்கப்பட்ட நாளின் கோர முகமே மே 18.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் தமிழர்களே வாழக்கூடாது என்ற பாணியில் தஞ்சமடைந்த மக்கள் மீது இரசாயனக்குண்டுகளாலும், பல்வேறு எறிகணைகளாலும் நடாத்தப்பட்ட மிகவும் 06▶

## நினைவேந்தலில் நேற்று



யாழ்ப்பாணம், மே 16

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் நான்காம் நாளான நேற்று யாழ்ப்பாணம் மாநகரில் அமைந்துள்ள தமிழர் ஆராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டோரின் நினைவுத்தூபியில் 06▶

## காணாமல் போனோரை மீட்க சர்வதேசத்தில் வழக்கு

ஜஸ்மின் சூக்கா அறிவிப்பு



யாழ்ப்பாணம், மே.16

இலங்கை அரசாங்கம் காணாமல் போனோர் தொடர்பாக தொடர்ச்சியாக தட்டிக் கழிப்புகளை செய்யுமாக இருந்தால் அல்லது அதற்கான பொறுப்புக் கூறலை தவிர்க்குமாக இருந்தால் இலங்கைக்கு எதிராக சர்வதேசத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்யமுடியும். அதன் மூலம் காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினையை முன்னிறுத்தி அதற்கான தீர்வுகளை முன்னெடுக்க 06▶

## தமிழ் அரசியல் கைதிகள் விடுதலைக்கு வலியுறுத்து



யாழ்ப்பாணம், மே 16

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் வலியையும், துயரையும் தமிழ் மக்கள் சுமந்து நிற்கின்ற இந்த மே மாதத்தில் ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்துதர வேண்டும் 06▶

## நினைவேந்தல் ஒழுங்குவிதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 16

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு ஒழுங்குகளை வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

உறவுகளைப் பறிகொடுத்த வயது முதிர்ந்த தாயாரொருவர் முதன்மைச் சுடரை ஏற்றுவார் எனவும் அதனை தான் வழங்கிவைப்பார் எனவும் முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், முதலமைச்சரின் 06▶

## நினைவேந்தலை நிறுத்துக!


தேரர் முறைப்பாடு

கொழும்பு, மே 16

வடக்கு கிழக்கில் எதிர்வரும் 18 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படவிருப்பதாகவும், அதனை நிறுத்துவதற்கான நீதிமன்ற உத்தரவை பெற்றுக்கொள்ளுமாறும் கோரி பௌத்த தகவல் கேந்திர நிலையம் இன்று முற்பகல், பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாட்டை பதிவு செய்தது.

இந்த முறைப்பாட்டினை கையளித்த தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து 06▶

# முள்ளிவாய்க்கால் தீப ஊர்திப் பவனி!






வல்வெட்டித்துறை, மே 16

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை வெளிச்சம் போட்டுக் காட்டும் தீப ஊர்திப் பவனி வல்வெட்டித்துறையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீப ஊர்திப் பவனி வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்கள் ஊடாகவும் பயணித்து, நாளைமறுதினம் முள்ளிவாய்க்கால் மண்ணைச் சென்றடைய உள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் இந்த ஊர்திப் பவனியைத் தரிசித்து வணக்கம் செலுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஆ-11)

## குழந்தையின் மரணத்தில் சந்தேகம்

கொழும்பு, மே 16

உயிரிழந்த குழந்தை ஒன்றை சந்தேகத்துக்கிடமான முறையில் பிரதே பரிசோதனைகள் ஏதும் மேற்கொள்ளாமல், அடக்கம் செய்ய முற்பட்ட பெற்றோர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மாளிகாவத்தை - ஹிஜ்ரா மாவத்தைப் பகுதியில், 2 வயதுடைய ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. இதையடுத்து, நேற்றுமுன்தினம் இறுதிச் சடங்குகள் முன்னெடுக்கப்பட்டன.

குழந்தையின் உடலில் சீனியின் அளவு அதிகரித்தமையே, உயிரிழப்புக் காரணம் எனப் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

ஆனால், மாளிகாவத்தைப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து, குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இதன்போது, உயிரிழந்த குழந்தையின் காலில் தீக்காயம் இருந்தமை கண்டறியப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, நீதிமன்ற உத்தரவுப்படி பிரதேச பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. (ஆ)

## விகாரைக்குள் துஷ்பிரயோகம்

கொழும்பு, மே 16

ஹிங்குராங்கொடை மாதம்பை பகுதியில் 13 வயது சிறுவன் ஒருவனை, விகாரைக்குள் வைத்து துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய 68 வயதுடைய நபர் ஒருவரை மாதம்பை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் மாதம்பை பகுதியில் உள்ள விகாரையில் கடமை புரிபவர் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர், விகாரைக்கு அருகில் மேலதிக வகுப்புச் சென்ற குறித்த சிறுவனை, விகாரைக்குள் அழைத்துச்சென்று துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளமை பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாதம்பை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

# மரண வீட்டு அரசியல் நாகரிகமற்ற செயற்பாடு

மன்னார், மே 16

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு இந்த நூற்றாண்டில் இடம் பெற்ற மிகப் பெரிய திட்டமிட்ட இனப்படுகொலை ஆகும் மரண வீட்டு அரசியல் செய்வது மனித நாகரிகத்துக்கு உவப்பானது அல்ல. இதை இரண்டு தரப்பும் புரிந்து கொள்ள வேண்டும் என்று மன்னார் மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனுக்கு நேற்றுச் செவ்வாய்க்கிழமை அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளார்.

"நீங்கள் தமிழ்த் தேசிய அடிப்படை வாதத்தில் இருந்து உருவெடுக்காவிட்டாலும் எமது மக்களின் இன்றைய அவலத்தைப் புரிந்து கொண்டு எவருக்கும் அஞ்சாமல் உள்ளதை உள்ளபடி இறுமாப்புடன் தெரிவிக்கின்றீர்கள். அதனால் தான் பெரும்பாலான தமிழ் மக்களால் நேசிக்கப்படுகின்ற நம்பிக்கைக்குரிய ஒருவராகத் திகழ்கின்றீர்கள் . தமிழ்த் தேசிய அரசியல் இப்போது உங்களைச் சுற்றியே உள்ளது. கூட்டமைப்பை கொழும்பு குத்தகைக்கு எடுத்து விட்டது. அவர்கள் சிங்கள தேசச் சிந்தனையுடன் கனவுலகில் வாழ்கிறார்கள். ஆகவே தமிழர்களின் நம்பிக்கையை காப்பாற்றவேண்டிய தார்மீகப் பெரும் பொறுப்பு தங்களுக்கு உண்டு.

இன அழிப்பு நினைவேந்தலை ஒருங்கிணைந்து செயலாற்ற முடியாமல், எதிரி சிரிக்குமளவுக்கு பலர் செயற்படுகின்றனர். மாணவர்களுடைய கோரிக்கையும் முழுமையாக ஏற்புடையதன்று. அவர்களுக்குப் பின்னும் பல்வேறு விதமான சூழ்ச்சிகள் உண்டு. அவர்களைச் சில அரசியல்வாதிகள் வழி நடத்துகிறார்கள் என்பதும் வெளிப்படையானது. ஆனால், மாகாண சபையிலும் பல்வேறு விதமான குறைபாடுகள் உள்ளன. தமிழரசுக் கட்சி உங்களைச் செயற்படவிடவில்லை. பல்வேறு விதமான நெருக்கடி தந்ததுடன் உங்கள் மாணவன் சுமந்திரன் மாகாணசபையில் உள்ள தனது அடிவருடிகளைக் கொண்டு குழப்பத்தை ஏற்படுத்தி தங்களை மனோ நிலை ரீதியாக சங்கடப்படுத்துகிறார் என்பது உலகறிந்த உண்மை.

இறந்தவர்களின் கண்ணீரில் எல்லோரும் பங்கு லாபம் தேடுகிறார்கள். எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர்தான் மாணவர்களுக்கு முள்ளிவாய்க்கால் ஞாபகம் வந்தது. இது மாணவர்களுடன் மட்டுப்படுத்தும் அளவுக்கு சாதாரணப் படுகொலை அல்ல. அவர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு இதில் உடன்பாடு இல்லை என அறிகின்றோம். இழந்த உறவுகளைத் தவிர உங்கள் ஒருவருக்கும் இது சொந்தம் இல்லை. அந்த ஆன்மாக்கள் உங்கள் ஒருவரையும் மன்னிக்க மாட்டா." என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஆ)

# வவுனியாவில் செயலமர்வு








வவுனியா, மே 16

வவுனியா, மன்னார் மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வு, வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்றது

மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இந்த செயலமர்வு இடம்பெற்றது.

இதில், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் இருந்து புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 212 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள், அதன் செயலாளர்கள், வடமாகாண கணக்காய்வு உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்னர்.

இதில், உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள், நிதிமூலங்கள் மற்றும் அதன் கையாளுகை, அதன் அதிகாரங்களைக் கையாளுதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. (ஆ)

எதிரொலி
Ethiroli
புதன். 16 மே 2018 ethirolimedia@gmail.com

# இறகைப் பிடுங்கிய இரணைதீவு

இரணைதீவு மக்களின் விடாமுயற்சிக்கு விஸ்வரூப வெற்றி கிட்டியிருக்கிறது. அவர்களின் நிலமீட்புப் போராட்டத்தின் உக்கிரத்தைத் தாங்க முடியாமல், அரசாங்கம் வேறு வழியின்றி, மீள்குடியேற்றத்துக்கான சட்டபூர்வ அனுமதியை வழங்கியிருக்கிறது. கிட்டத்தட்ட 20 வருடங்களாக இரணைதீவு மக்களின் ஏக்கம் ஒருபடியாகத் தீர்ந்து விட்டது. அத்தோடு மக்கள் போராட்டத்தின் மற்றொரு வீரியமிக்க வடிவத்தையும் இரணைதீவு மக்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

தங்களை மீள்குடியேற்றுமாறு கோரி மற்றைய இடங்களைப் போலவே இரணைதீவு மக்களும் அவ்வப்போது போராட்டங்களை நடத்திவிட்டுக் கலைந்து செல்பவர்களாகவே இருந்தனர். அவர்களுக்கு கிறிஸ்தவ மதகுருமாரின் ஆதரவும், வழிகாட்டலும் இருந்தது இன்னொரு வகையில் பலமாக இருந்தது. என்ன தான் இருந்தாலும், என்ன பயன்? கடற்படை ஒரு அங்குலம் நிலத்தைக் கூட மக்களிடம் திருப்பிக் கொடுக்க முடியாது என அடம் பிடித்தது.


" எங்கள் மண் இனி அவ்வளவுதான். மறந்துவிட வேண்டியதுதான்" என்று இரணைதீவு மக்களும் சோர்ந்துவிட்டார்கள். அப்போதுதான், ஒரு திடீர் எழுச்சியாக கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பு மக்களின் தொடர் போராட்டமும், அதன் விளைவாக அரசு அடிபணிந்து அவர்களின் நிலத்தை மீளக்கையளித்த சம்பவமும் அரங்கேறியது.

" அப்படியானால் முன்னரைப் போல அவ்வப்போது மட்டும் போராடிவிட்டுக் கலையாமல், இனிமேல் இறுதிவரை உறுதியான முடிவு தெரியும் வரை நாமும் போராடினால் இரணைதீவை மீட்க முடியும்" என்ற நம்பிக்கை இரணைதீவின் மைந்தர்களிடம் உதித்தது. தொடங்கினார்கள் அகிம்சைப் போரை. தங்களை மீள்குடியேற்றும் வரை போராட்டக் களத்தைவிட்டு அகலமாட்டோம் என இரணைதீவு மக்கள் உறுதியாக நின்றபோதும், அவர்களின் நிலங்களை மீளக்கையளிப்பதற்கான எந்தவித எத்தனத்தையும் அரசோ, படைத்தரப்போ வெளிப்படுத்தவில்லை. எத்தனை காலம் தான் பொறுமையாக ஒரே இடத்தில் முடிவு தெரியாமல் போராடிக் கொண்டிருப்பது. அதனால் அறுவைச் சிகிச்சை செய்தேனும் நிலமீட்புப் போரில் வெற்றியைப் பெறுவதென்று முடிவெடுத்தார்கள். தொடர் போராட்டத்தால அரச இயந்திரத்தை அசையவைக்கலாம் என்பதைக் கேப்பாபிலவு மக்களின் போராட்டம் வெளிப்படுத்த, அதிலிருந்து இன்னொரு படி உயர்வாக, 'மயிலே மயிலே இறகு போடு என்றால் இறகு போடாது, அதனைப் பிடுங்கினால் தான் காரியம் ஆகும்' என்பதை தங்கள் செயல் மூலம் சாதித்துக் காட்டியிருக்கிறார்கள் இரணைதீவு மக்கள்.

குடாரப்பிலே பிரிகேடியர் பால்ராஜ் தலைமையில் ஊடறுத்து கடல் வழியாகத் தரையிறங்கிய புலிகளின் அணிகள், எப்படி ஆனையிறவுச் சமரிலே திருப்புமுனையை ஏற்படுத்தினவோ, அது போல ஒரு வெள்ளைக்கொடித் தரையிறக்கத்தை எவரும் எதிர்பாராத வகையில் இரணைதீவு மக்கள் முன்னெடுத்தார்கள். அந்தப் பகுதி மக்கள் அனைவருமே கடற்றொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டிருப்பதால், தங்களிடம் இருந்த படகுகளில் வெள்ளைக் கொடியைக் கட்டிக் கொண்டு, அரசின் அனுமதி இல்லாமலேயே தங்கள் தீவில் கால் பதித்து, அங்கு தற்காலிகக் குடிசைகளை அமைத்தும், பாழடைந்த கட்டடங்களைச் சுத்தம் செய்தும் குடியிருந்து போராட்டத்தை தொடர்ந்தார்கள். இரணைதீவு மக்களின் போராட்டத்தில் இருந்த இன்னொரு முக்கிய அம்சம் எந்தவொரு அரசியல் சக்தியின் பின்புலமோ, ஆதரவோ இல்லாமை. அப்படியிருந்தும் தங்களுடைய ஓர்மத்தின் மூலம் சொந்த மண்ணை மீட்டெடுத்த மக்களை எப்படிப் பாராட்டாமல் இருக்கமுடியும்?

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# யாழில் 'முன்னோக்கி நகர்வோம்' அமைப்பு அங்குரார்ப்பணம்



யாழ்ப்பாணம்,மே 16

வடக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவர் சி. தவராசா மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் ந.வித்தியாதரன் ஆகியோரை இணைப்பாளர்களாகக் கொண்டு யாழில் 'முன்னோக்கி நகர்வோம்' எனும் அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி அமைப்பின் ஆரம்ப நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி முதல் யாழ். நல்லூர் கைலாசபிள்ளையார் பின் வீதியில் நடைபெற்றது.

வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள், குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்கள் மற்றும் விதவைகளின் நிலைபேறான வாழ்வாதார மேம்பாட்டுக்கு அரச நிறுவனங்கள் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கும் நோக்கிலும், குறித்த திட்டங்களைத் துரித கதியில் செயற்படுத்தும் நோக்குடனும் 'முன்னோக்கி நகர்வோம்' எனும் இந்த அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளதாக மேற்படி அமைப்பின் இணைப்பாளரும், வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான சி. தவராசா தெரிவித்தார்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான அ. பரஞ்சோதி, பா. கஜதீபன், எழுத்தாளர் சிவராசா கருணாகரன், இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை இந்த நிகழ்வு கைலாச பிள்ளையார் பின்வீதியிலுள்ள சந்திரகுமாரின் வீட்டிலேயே நடைபெற்றதுடன் இதன் பின்னணியில் குகநாதன், சந்திரகுமாரே உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பிரிட்டன் றகர் அணியின் மற்றைய வீரரும் உயிரிழப்பு

கொழும்பு,மே 16

நட்புறவு றகர் போட்டியில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்திருந்த பிரித்தானிய நாட்டு றகர் அணி ஒன்றின் பாதிக்கப்பட்டிருந்த இரண்டாவது வீரரும் நேற்று உயிரிழந்தார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர இதனைக் கூறியுள்ளார்.

நட்புறவு றகர் போட்டியொன்றில் விளையாடுவதற்காக கடந்த 10ஆம் திகதி இலங்கை வந்த பிரித்தானிய நாட்டு றகர் அணி கடந்த 12 ஆம் திகதி கொழும்பில் உள்ள விளையாட்டரங்கு ஒன்றில் விளையாடியுள்ளது.

போட்டி முடிவடைந்த பின்னர் இரவு விருந்தை முடித்துவிட்டு அவர்கள் தங்கியிருந்த விடுதிக்கு சென்றுள்ளனர்.

பின்னர் அவர்கள் மீண்டும் கொள்ளுபிட்டி பிரதேசத்தில் உள்ள களியாட்ட விடுதியொன்றிற்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

களியாட்ட விடுதியில் இருந்து அதிகாலை 4 மணியளவில் அவர்கள் மீண்டும் விடுதிக்கு திரும்பியுள்ள நிலையில், குறித்த வீரர்களில் இருவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டனர்.

சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த இருவரில் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்திருந்த நிலையில் நேற்று இரண்டாவது வீரரும் உயிரிழந்தார்.

# ஆடுகளை கடத்தியவர் சிக்கினார்

வவுனியா,மே.16

கிளிநொச்சி பகுதியிலிருந்து உரிய ஆவணங்கள் இன்றி 61 ஆடுகளை கடத்திச் சென்ற நபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபரை வவுனியா - நொச்சிமோட்டை பாலத்தில் வைத்து பொலிஸார் நேற்று அதிகாலை கைது செய்ததுடன், ஆடுகளை கொண்டு செல்ல பயன்படுத்திய வாகனத்தையும் கைப்பற்றியுள்ளனர்.



கைது செய்யப்பட்ட நபர் புத்தளத்தைச் சேர்ந்த 54 வயதானவர் என தெரியவந்ததுடன், வாகனத்தை மறித்து சோதனை நடவடிக்கை மேற்கொண்ட பொலிஸாருக்கு இரண்டாயிரம் ரூபா தருவதாகவும் வாகனத்தை விடுவிக்குமாறும் அவர் கேட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# சாதித்தது கொல்கத்தா

கொல்கத்தா, மே 16

குல்தீப் யாதவின் சுழல்ஜாலத்தால் ராஜஸ்தானை வீழ்த்தி புள்ளிப்பட்டியலில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியது கொல்கத்தா நைட் ரைடர்ஸ்.

ஐ.பி.எல் தொடரில் ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் ராஜஸ்தான்றோயல்ஸ்அணியும் மோதின. அடுத்த சுற்றுக்கு முன்னேற இந்தப் போட்டியை வென்றேயாக வேண்டும் என்ற இக்கட்டான நிலையில் இரு அணிகளும் நேற்றைய போட்டியில் களமிறங்கியிருந்தன. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று களத்தடுப்பைத் தீர்மானித்தது கொல்கத்தா. முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி 142 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பட்லர் 39 ஓட்டங்களையும், திரிபாதி 27 ஓட்டங்களையும், உனட்கட் 26 ஓட்டங்களையும் பெற்றனர். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களோடு வெளியேறினர்.

பந்துவீச்சில் குல்தீப் யாதவ் 4 விக்கெட்டுகளை வீழ்த்தி, ராஜஸ்தானின் ஓட்டக்குவிப்பைக் கட்டுப்படுத்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு முதல் ஓவரிலேயே 21 ஓட்டங்களைக் குவித்து நம்பிக்கை கொடுத்தார் நரைன். அடுத்த ஓவரில் நரேன் வீழ்ந்தாலும் கிறிஸ் லின் அடித்தும், அடங்கியும் ஆடி அணியை வெற்றியை நோக்கி நகர்த்தினார். உத்தப்பா, ராணா ஆகியோரின் வீழ்ச்சிக்குப் பின்னர் களமிறங்கிய அணித்தலைவர் தினேஸ் கார்த்திக், வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பை தன் கையில் எடுத்து,17 ஆவது ஓவரின் கடைசிப் பந்தில் சிக்ஸர் அடித்து, ராஜஸ்தானை மண்டியிடவைத்தார். இதனால் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்று, புள்ளிப்பட்டியலில் கொல்கத்தா முன்னேறியது.கிறிஸ் லின் 45 , சுனில் நரைன் 21, தினேஸ் கார்த்திக் (ஆட்டமிழக்காமல்) 41 ஓட்டங்களைப் பெற்றனர். 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய குல்தீப் யாதவ் ஆட்டநாயகனானார். (அ)



## இன்று நாளும் கோளும்

16.05.2018 புதன்கிழமை விளம்பி வருடம் வைகாசி மாதம் 02 ஆம் நாள்


பிரதமை பி.ப. 04.04 வரை | கார்த்திகை மு.ப. 10.22 வரை | குளிகை மு.ப. 10.30-12.00

இராகுகாலம் 12.00- 01.30 | சுபநேரம் காலை 09.30 - 10.30 | எமகண்டம் 07.30 - 09.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அனுகூலம் | நன்மை | பீடை | மகிழ்ச்சி | பொறுமை | போட்டி | பெருமை | அன்பு | திறமை | தனம் | தாமதம் | நற்செய்தி |

140 மில்லியன் ரூபா விவகாரம்:

# மகிந்தவுக்கு நெருக்கடி



கொழும்பு , மே 16

140 மில்லியன் ரூபா நட்டத்தை மீளப் பெற்றுத் தருமாறு கோரி, இலங்கை போக்குவரத்துச் சபையால் தொடரப்பட்டுள்ள வழக்குத் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி வரை மகிந்த ராஜபக்சவுக்கு நீதிமன்றம் அவகாசம் வழங்கி உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் இருந்து 140 மில்லியன் ரூபா நட்டத்தை மீளப் பெற்றுத் தருமாறு கோரி, இலங்கை போக்குவரத்துச் சபையால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு, கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தேர்தல் பணிகளுக்காக இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்கள் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் ஏற்பட்ட நட்டத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை போக்குவரத்துச் சபையால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஆ)



# பாதுகாப்பு உயர் மட்டத்தினருடன் இந்திய இராணுவத் தளபதி சந்திப்பு

கொழும்பு, மே 16

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத், பாதுகாப்புச் செயலர் மற்றும் முப்படைகளின் தளபதிகள் ஆகியோரை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தி உள்ளார்.

நான்கு நாட்கள் பயணமாக கொழும்பு வந்துள்ள இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் ராவத், அரச மற்றும் பாதுகாப்புத் துறை உயர்மட்ட அதிகாரிகளுடனான சந்திப்புகளில் பங்கேற்றார்.

பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்னவுடனான சந்திப்பின்போது, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், கூட்டுப் படைகளின் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க ஆகியோரையும் இந்திய இராணுவத் தளபதி தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்புகள் கூட்டுப்படைகளின் தலைமையகத்திலும், கடற்படைத் தலைமையகத்திலும் இடம்பெற்றன.

இதன் போது, இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ஆ)

# ரூபவாஹினி புதிய தலைவராக இனோக்கா

கொழும்பு , மே 16

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக இனோக்கா சத்யாங்கனி நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஊடகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுயாதீன தொலைக்காட்சி சேவை நிறுவனத்தின் தலைவராக திலக ஜயசுந்தரவும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக மொஹமட் சித்திக்பாருக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவராக உமா ராஜமந்திரி நியமிக்கப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரவி ஜயவர்தன தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்து, ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு கடிதம் அனுப்பியிருந்தார். இதனை அடுத்தே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஆ)



# வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

சிலாபம் , மே 16

சிலாபம் - குருநாகல் பிரதான வீதியில் மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார். மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் விலத்தவப் பகுதியைச் சேர்ந்தவரே உயிரிழந்துள்ளார்.

மீன் கொள்வனவு செய்வதற்காகப் பயணித்த சிறிய ரக லொறி ஒன்று பாதையின் குறுக்காகப் பயணித்த மாடு ஒன்றுடன் மோதி பின்னர், எதிரில் வந்த வான் மற்றும் மோட்டார் சைக்கிள்களுடன் மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் தங்கொட்டுவப் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

காயமடைந்தவர்கள் சிலாபம் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

# மாத்தறையில் விபத்து: மூவர் உயிரிழப்பு

மாத்தறை , மே 16

மாத்தறை ஊருபொக்க - ரொட்டும்ப பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் ஓட்டோவில் பயணித்த மூவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

பஸ்கொட, பெங்கமுவ மற்றும் ஹதுகல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 34, 50 மற்றும் 53 வயதானவர்களே உயிரிழந்தவர்கள் ஆவர்.

ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையே இந்த விபத்துக்குக் காரணம் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவத்தில்படுகாயமடைந்த ஓட்டோ சாரதி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஆ)

# வவு. சிறைக் கைதிகள் உணவுத் தவிர்ப்பு

வவுனியா, மே 16

வவுனியா சிறைச்சாலையில் உள்ள கைதிகள் நேற்றுக் காலை உணவுத் தவிர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர் என சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

வவுனியா மாவட்டத்தில் உள்ள சிறைக் கைதிகளை அனுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றம் செய்வதைக் கண்டித்தே இந்த உணவுத் தவிர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டக் கைதிகளின் இந்த உணவுத் தவிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவாக மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த கைதிகளும் நேற்றுக் காலை உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர் எனவும் சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஆ)

# லசந்த படுகொலை: அறிக்கை சமர்ப்பிப்பு



கொழும்பு , மே 16

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினர், படுகொலை தொடர்பான புதிய தகவல்களுடன் விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

இந்த அறிக்கை நேற்றுமுன்தினம் கல்கிசை நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சமர்ப்பிக்கப்பட்டது.

இதையடுத்து, இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களான பிரதி பொலிஸ் மா அதிபர் பிரசன்ன நாணயக்கார மற்றும் கல்கிசை பொலிஸ் நிலையக் குற்றப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி திஸ்ஸ சுகதபால ஆகியோரை எதிர்வரும் 25 ஆம் நாள் வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஆ)

# நாட்டில் விரைவில் மொழிப் பல்கலை!

கொழும்பு , மே 16

நாட்டில்விரைவில்மொழிப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட உள்ளது என்று தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க, அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தி மற்றும் நடப்பு விவகாரப் பிரிவு தேசிய நல்லிணக்கத்தை வலியுறுத்தும் நோக்கில் தென்னிலங்கையில்நடத்திய நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நாட்டில் மொழிக் கொள்கையை முறையாக அமுலாக்கினால் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். பல்கலைக்கழகங்கள் முதலான உயர் கல்விக் கூடங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் அந்நிய மொழிகளைக் கற்க வேண்டும். இதன் மூலம் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.



அரச கருமமொழிக் கொள்கை அமுலாக்கப்படும் விதம் மென்மேலும் சிறப்பாக்கப்பட வேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார்.

# குமுதினிப் படுகொலை: நெடுந்தீவில் நினைவேந்தல்!





நெடுந்தீவு, மே 16

குமுதினிப்படுகொலையின் 33ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன், வடமாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், விந்தன் கனகரட்னம், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1985 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி நெடுந்தீவு துறைமுகத்தில் இருந்து பயணிகளுடன் குமுதினிப் படகு தனது பயணத்தை வழமை போல ஆரம்பித்தது. படகு அரை மணித்தியாலம் பயணத்தை மேற்கொண்டிருந்தவேளை, கடற்படையால் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டு அதில் பயணித்த குழந்தைகள் பெண்கள் உட்பட 36 பேர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர். (ஆ)

# நாளை மறுதினம் முதல் எரிபொருள் நிவாரணம்

கொழும்பு, மே 16

நாளை மறுதினம் தொடக்கம் கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்கப்படும் என்று கடற்றொழில் மற்றும் நீரியில் வள அமைச்சர் விஜித்த முனி சொய்ஸா தெரிவித்துள்ளார்.

" வெளியிணைப்பு மோட்டார் படகுகளுக்கான மண்ணெண்ணெய் நிவாரணத்துக்காக 35 கோடி ரூபா செலவிடப்பட உள்ளது. பைபர் கிளாஸ் படகுகளுக்கான மண்ணெண்ணெய் நிவாரணம் வழங்க 337 கோடி ரூபாவும், ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளுக்கான மண்ணெண்ணெய் நிவாரணத்துக்காக 115 கோடி ரூபாவும் செலவிடப்பட உள்ளது.



இதேவேளை, எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமையால் விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் மற்றும் டீசல் நிவாரணத்தை வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக அரசாங்கம் 500 கோடி ரூபாவை செலவிடுகிறது." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# கரவெட்டியில் மெத்தை வழங்கல்





யாழ்ப்பாணம், மே 16

கரவெட்டி பிரதேசச் செயலக சமூக சேவை பிரிவினரின் ஏற்பாட்டில் முள்ளந்தண்டு பாதிப்படைந்தவர்களுக்கு காற்று மெத்தைகள், கரவெட்டியில் நேற்றுமுன் தினம் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், கரவெட்டி பிரதேச செயலர் நு. தயாரூபன், உதவிப் பிரதேச செயலர் ரஜீவ், சமூக சேவை உத்தியோகத்தர் சிறிவரத பாஸ்கரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இந்த நிகழ்வில் மூன்று பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. (ஆ-11)

# மீனவர்கள் போராட்டம்

கொழும்பு, மே 16

மீனவர்களுக்குப் பழைய விலைக்கே மண்ணெண்ணெய் வழங்க வலியுறுத்தி, நாட்டின் பல பகுதிகளிலும் மீனவர்கள் நேற்றுக் கடலுக்குச் செல்லாமல் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்காரணமாக நீர்கொழும்பு, சிலாபம் உள்ளிட்ட பிரதேசங்களில் பிரதான மீன் சந்தையில் மீன்களை கொள்வனவு செய்ய முடியவில்லை என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (ஆ)

# கீத் நொயார் கடத்தல்: கருவிடம் விசாரணை!




கொழும்பு, மே 16

ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலம் பெறவுள்ளனர்.

நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து விரைவில் சபாநாயகரிடம் வாக்குமூலம் பெறப்படும் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சராக இருந்த கரு ஜெயசூரிய, கீத் நொயார் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு தகவல் அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கீத் நொயார் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக, இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரான மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)



# மனம் சரியாக் களைச்சுப் போச்செடா மேனை

எதுக்கும் ஒருக்காச் சொல்லிப்போட்டு அழு. ஒண்டும் சொல்லாமல் கொள்ளாமல் அழுதா நான் என்னத்துக்கு நீ அழுகிறாய் எண்டு நினைக்கிறது? – எண்டு அதட்டினன். அப்பதான் அந்தப் பிள்ளை சொல்லுது ஆரோ தன்னோடை சேட்டை விட்டிட்டு ஓடுறான் எண்டு. இஞ்சை குமர் பிள்ளையைத் தனியா விடக்கூடிய காலம் ஒண்டு இருந்ததுதான். இப்ப இல்லை. கண்டதும் நிண்டதும் இப்ப கால் முளைச்சு ஓடித்திரியிதுகள். அதாலை கொஞ்சம் கவனமாத் திரிய வேணும்போலை கிடக்கு.

ஊருலகத்திலை நாங்கள் நினைக்கிறமாதிரி என்ன நடக்கிது? முந்தின மாதிரியே. மழை இருட்டிக் கொண்டு வந்து கடாம் பிடாம் எண்டு இடி முழங்கி மின்னல் அடிக்கேக்கை மழை வரப்போகுதெண்டு ஓடி ஓடி எல்லாத்தையும் எடுத்து உள்ளுக்கை போட்டிட்டுப் பாத்தால் பிறகு கொஞ்ச நேரத்திலை வெய்யில் அடிக்கும். இது மாதிரித்தான் எல்லாம் தலைகீழாக் நடக்கிது.

எங்கடை ஆக்கள் செய்யாத விசியத்தை ஆளுநர் குரே செய்யப்போறார். அடுத்த மாதம் மர நடுகை மாதமாம். யாழ்ப்பாண நகர எல்லேக்கை நாலாயிரம் மரங்களை நடப்போயினமாம். நல்ல விசியம். நேற்றைக்கு அதுக்கெண்டு ஒரு கூட்டத்தை அவர் நடத்தினவராம். அந்தக் கூட்டத்துக்கு வட மாகாண அமைச்சரும், மாநகர மேயரும் வந்தவையாம். இப்ப இருக்கிற ஆக்கள் கரைச்சல் படுகிற மாதிரி அடுத்து வாற சந்ததியும் தண்ணி வெந்நி இல்லாமல் கஷ்டப்படப்பிடாதாம். குரே யோசிக்கிற மாதிரி ஒவ்வொரு ஆக்களும், ஒவ்வொரு அதிகாரியும் சிந்திச்சால் இலங்கை எங்கை போகும் எண்டு தெரியுமே? அப்பிடியே ஆகாயத்துக்கும் அங்காலை எல்லே போவிடும்.

அப்ப ஐங்கரநேசன் கொண்டு வந்த மர நடுகை என்ன மாதிரி எண்டு முதலி கேக்கிறான். அவனுக்கு ஏதாவது பதில் சொல்ல வேணும் எல்லே அதுக்காகச் சொன்னன். "இனி மேல் முந்திக் கொண்டு வந்ததுக்கு எதிராத்தான் எல்லாம் நடக்கும். இப்ப ஓராள் ஒரு கடையை நடத்திறார். அதுக்குப் பேர் சரஸ்வதி கடை எண்டு வைச்சுக் கொள்ளுவம். அப்ப அந்தக் கடைக்கு எதிர்க்கடை போடுறவை என்ன செய்வினம் எண்டால் "நியூ சரஸ்வதி கடை" எண்டுதானே போடுவினம். அதைப்போலைதான் இதுகும். இனிமேல் எல்லாம் "நியூ" போலைதான் வரும். இல்லாட்டி அரசியல் எப்பவோ செத்தெல்லே போகும். நல்லதெல்லே நடக்கும். அப்ப மக்கள் சந்தோஷமாவிடுவினம். அப்ப அரசியல் நடத்தேலாது. ஆனபடியாலை அரசியல் நடத்த வேணும் எண்டால் சனம் ஏக்கத்தோடையும் இருக்க வேணும். சந்தோஷமா இருக்கப்பிடாது.

திரும்பத் திரும்ப கீறு விழுந்த றைக்கோட்டைப் போட்ட மாதிரி ஒரே கதையைத்தான் கதைக்க வேண்டிக் கிடக்கு. அப்பிடித்தானே எல்லாம் நடக்கிது. இப்ப நாலாயிரம் கண்டு நடுவம் எண்டு உவை வெளிக்கிட அது பிழை இது சரி எண்டு எதிர்ப்பார்ட்டி கதைக்க வெளிக்கிட. மரம் நடுகினம் எண்டிட்டு அவை ஏதோ செய்து போட்டினம். அதாலை ஒண்டைக் காணேல்லை, இரண்டைக் காணேல்லை எண்டு அவை கத்த. ஒரே விளையாட்டாப் போவிடும். பிறகு அடுத்த ஆட்டம் இன்னுமொரு கூட்டம் வந்து அதுக்கு விசாரணை, இதுக்கு விசாரணை எண்டு கொழுத்தாடு பிடிக்க. மாறி மாறி வாறவை அரசியல் நடத்தத்தான் சரியாக்கிடக்கும்.

இனிமேல் எல்லாப் பாரத்தையம் கடவுளிட்டை போட்டிட்டு நடக்கிறதைக் காண வேண்டியதுதானே! அவ்வளவுக்கு மனம் களைச்சப்போச்சுது. என்ன?

- வில்லங்கம் விநாசி

# தொடர்ச்சிகள்

## காணாமல் போனோரை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென அழுத்தம் கொடுப்பதன் ஊடாக காணாமல் போனோர் தொடர்பான அரசாங்கத்தின் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்த முடியும் என ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் பான்கீமூனால் அமைக்கப்பட்ட குழுவின் இலங்கை தொடர்பான விவகாரத்துக்கு பொறுப்பாக இருந்த உறுப்பினரும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் (ITJP) நிறைவேற்றுப் பணிப்பாளருமான ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரனது அலுவலகத்தில் மே 18 காணாமற்போனவர்களின் உறவினர்களுடன் ஸ்கைப் மூலம் ஜஸ்மின் சூக்கா மேற்கொண்ட சந்திப்பை அடுத்து இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள காணாமற்போனோர் அலுவலகத்தின் ஊடாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதையும் கண்டறியப்பட வேண்டும். 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி ஒரே நாளில் இராணுவத்திடம் சரணடைந்தும் மற்றும் வேறு வழிகளிலும் காணாமல் போனவர்களின் 280 பேரின் பெயர்களையும் அவர்களது புகைப்படங்களையும் அவர்கள் தொடர்பான விவரங்களையும் (ITJP) என்ற இணையத்தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் காணாமல் போனோர் அலுவலகமானது தனது விசாரணைகளை ஆரம்பிக்கும் போது இவ் 280 பேரில் இருந்து தனது விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும். இது தொடர்பாக காணாமல் போனோர் அலுவலத்தின் தலைவருக்கு நாம் கடிதம் ஒன்றை எழுதியுள்ளோம்.

இதேபோன்று குறித்த மே 18 அன்று இராணுத்திடம் சரணடைந்தவர்கள் தொடர்பில் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாகவும் இராணுவம் பதிலளிக்க வேண்டும். குறிப்பாக அக்காலப்பகுதியில் கட்டளையிடும் பிரிவில் இருந்த 58 ஆவது படையணியின் கட்டளை அதிகாரிகளான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய ஆகியோர் இதற்கு பதிலளிக்க வேண்டியதுடன் காணாமற் போனோர் அலுவலகமானது இவர்களிடமும் விசாரணைகளை மேற்கொண்டு உண்மைகளை கண்டறிய வேண்டும்.

காணாமற்போனோருடைய உறவினர்கள் உள்நாடுகளில் மாத்திரமன்றி வெளிநாடுகளிலும் தஞ்சம் அடைந்துள்ளனர். இந்நிலையில் இவர்களது விடயங்களையும் பதிவு செய்யவதற்கான பொது நிலையான தளம் ஒன்றை பயன்படுத்த வேண்டும்.

மேலும் காணாமற்போனார் தொடர்பான விடயத்தில் சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களது பாதுகாப்பு தொடர்பிலும் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. குறிப்பாக காணாமற்போனோர் தொடர்பில் அவர்களது உறவினர்களே சாட்சியாக உள்ளனர். இந்நிலையில் இவர்கள் காணாமற்போன தமது உறவுகள் தொடர்பாக சாட்சியமளிப்பதற்கு அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள காணாமற்போனோர் அலுவலகம் அமைய வேண்டும். அவ்வாறு இருந்தாலேயே அவர்கள் அச்சம் இன்றி சாட்சியளிக்க முடியும். இது விடயத்திலும் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

## நினைவேந்தல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரை மட்டுமே நிகழ்வில் இடம்பெறும் எனவும் கூறப்பட்டுள்ளது.

முதலமைச்சரால் அனுப்பிவைக்கப்பட்ட நிகழ்வு ஒழுங்குகள் தொடர்பான அறிக்கை வருமாறு-

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் மக்கள் முற்பகல் 10.15 மணியளவில் வந்து சேரவேண்டும்.

மக்கள் அமர்ந்திருந்து இளைப்பாற ஒழுங்குகள் செய்யப்படும்.

யாழ்ப்பாணத்திலிருந்து 6 பேருந்துகளும், வவுனியாவிலிருந்து 4 பேருந்துகளும், மன்னாரிலிருந்து 5 பேருந்துகளும், கிளிநொச்சியிலிருந்து 3 பேருந்துகளும் முல்லைத்தீவிலிருந்து 10 பேருந்துகளும் மக்களை ஏற்றி வந்து முள்ளிவாய்க்காலில் விடுவது மட்டுமன்றி, நிகழ்வுகள் நிறைவடைந்ததும் அனைவரையும் ஏற்றிச் சென்று அந்தந்த இடங்களிலும் இறக்கும் சேவைகளிலும் ஈடுபட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எந்த எந்த இடங்களில் மக்கள் பேருந்துகளில் ஏறலாம், யாருடன் தொடர்புகொள்ளவேண்டும் என்ற விவரங்கள் நாளை புதன்கிழமை அறிவிக்கப்படும்.

சுடரேற்றும் நேரம் சரியாக முற்பகல் 11 மணியாகும். வெளிமாவட்டங்களிலிருந்து வருவோர் 10.30 மணிக்கு முன்னர் தமக்கு ஒதுக்கப்புட்ட இடங்களில் வந்து அமர வேண்டும்.

உறவுகளைப் பறிகொடுத்த வயது முதிர்ந்த தாயார் ஒருவரிடம் முதலமைச்சர் சுடரைக் கையளிக்க, அதனை அவர் ஏற்று முதன்மைச் சுடரை ஏற்றுவார்.

அவர் ஏற்றியதும் ஏனைய சுடர்களை பொதுமக்கள் ஏற்றுவார்கள். ஏற்றிவிட்டு அதே இடத்தில் நின்று மலரஞ்சலி செலுத்துவார்கள்.

சுடர்ரேற்றும் போது பொருத்தமான நினைவு இசை எழுப்பப்படும். ஐந்து நிமிட நேரம் அப்போது மௌனம் கடைப்பிடித்து அஞ்சலி செலுத்தப்படும்.

நினைவு இசை நிறைவடைந்ததும் நினைவு நாள் உரையை முதலமைச்சர் வழங்குவார். உரை முடிவடைந்ததும் நினைவேந்தல் நிகழ்வுகள் நிறைவடையும்.

சகலரும் இந்த துயர நாளில் எமது இறந்த உறவுகளை உணர்வுபூர்வமாகவும் மென்முறையோடும் சமயச் சார்புடனும் நினைவுபடுத்துவோமாக!

உறவுகளை இழந்தோருக்கு ஆறுதல் கூறுவோமாக!

எவ்வாறு முரண்டு நின்ற எமது தமிழ் உறவுகள் முள்ளிவாய்க்காலின் தாற்பர்யம் உணர்ந்து தனித்துவம் உணர்ந்து தனிச் சிறப்புணர்ந்து ஒன்று சேர்ந்துள்ளார்களோ அதேபோன்று இனிவரும் வருடங்களில் எமது இனத்தை ஒன்றிணைக்கும் துன்பியல் நாளாக மே 18ஐ இந்நாள் பரிணமிக்க இப்பொழுதிருந்தே ஆவன செய்வோமாக.

## தமிழ் அரசியல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஜனநாயக போராளிகள் கட்சி வலியுறுத்தியுள்ளது.

ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்க்கிழமை கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் இடம்பெற்றது. அதன்போதே அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் துளசி இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தமிழ் அரசியல் கட்சிகளின் விடுதலை தொடர்பான விவகாரம் இந்தக் காலத்தில் அதிக சூடு பிடித்து காணப்படுகின்றது. தமிழீழ விடுதலை போராட்டத்தில் ஒட்டுமொத்த தமிழினமுமே பங்கெடுத்து இருந்தது என்பதுதான் உண்மை. அப்படியிருக்க அந்த விடுதலை போராட்டத்தின் பெயரால் சில நூற்றுக் கணக்கானோர் சிறைச்சாலைகளில் தொடர்ச்சியாக அடைத்து வைக்கப்பட்டு இருப்பது அநீதியும், இயற்கை நீதிக்கு புறம்பான விடயமும் ஆகும்.

அதே நேரத்தில் தமிழீழ விடுதலை போராட்டத்தில் ஈடுபட்ட பல்லாயிரக் கணக்கான இளையோர்கள் மறுவாழ்வு வழங்கப்பட்டு சமூகத்தில் கலக்க விடப்பட்டு உள்ளனர். இவர்கள் சமூக விரோத குற்ற செயல்களிலோ, வன்முறை நடவடிக்கைகளிலோ ஈடுபடாமல் வன்முறை அற்ற அமைதியான வாழ்க்கையில் ஈடுபட்டு உள்ளார்கள்.

மேலும் நல்லாட்சி அரசைக் கொண்டு வந்ததிலும், அதைத் தொடர்ந்து நிலை நிறுத்தி வைத்திருக்கச் செய்வதிலும் தமிழர் தரப்பின் பங்களிப்பு மிக காத்திரமானதாக உள்ளது.

இந்த நாட்டு சட்டத்தின் பிரகாரம் பொதுமன்னிப்பு வழங்குகின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. எனவே நல்லாட்சியின் நாயகரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் அரசியல் கைதிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கி தமிழர் தரப்புக்கு நன்றியையும், நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்த வேண்டும்.

இந்த விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதியுடன் ஒன்றித்து செயற்பட வேண்டும். முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் வலியையும், துயரையும் தமிழ் மக்கள் சுமந்து நிற்கின்ற இந்த மே மாதத்தில் தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பத்துக்கான நீதியை ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து வழங்குதல் வேண்டும் என்றார்.

## நினைவேந்தலில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நினைவேந்தலில் பலர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

## மயக்க மருந்து... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதன் அடிப்படையில் குறித்த பகுதியில் உள்ள சிசிரீவி கமராக்களில் உள்ள பதிவுகளை பொலிஸார் பார்வையிட்டு வருகின்றனர்.

இக்கொள்ளை தொடர்பானமேலதிகவிசாரணையினை வவுனியா பொலிஸாரினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## தேவையற்ற... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு கொண்டு வரும் போது டீசல் லீற்றரொன்று 83 ரூபா 40 சதமாக இருந்தது. அதற்கு 31 ரூபா 60 சதம் வரியை அரசாங்கம் அறவிடுகின்றது. இதன்படியே டீசல் லீற்றரொன்று 109 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. அதேபோன்று பெற்றோல் லீற்றரொன்று 67 ரூபா 40 சதத்திற்கே இறக்குமதி செய்யப்படுகின்றது. அதற்கு 60 ரூபா 19சதம் வரி அறவிடப்படுகின்றது.

இதனால் சந்தையில் 138 ரூபா வரை பெற்றோல் விற்பனை செய்யப்படுகின்றது. இதனைத் தவிர உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்தது , டொலரின் பெறுமதி அதிகரித்தது. இதனால்தான் இங்கு எரிபொருள் விலைகளை அதிகரித்தோம் என கூறுவது பொய்யே. எரிபொருள் மீதான வரியை அதிகரித்தமையினாலேயே இவ்வாறு விலைகள் அதிகரித்துள்ளது. வரி அதிகரிப்பின் முழு வருமானமும் அரசாங்கத்துக்கே செல்லும்.

இதேவேளை அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் பாரியளவில் அதிகரித்துள்ளன. அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பொதியின் விலை கடந்த இரண்டரை வருடங்களில் 4108 ரூபாவினால் அதிகரித்துள்ளது. அரிசி, பருப்பு, வெங்காயம், பால் மா, சமையல் எரிவாயு என சகல அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் பெருமளவு அதிகரித்துள்ளன.

அதேபோன்று உற்பத்தி பொருட்கள் பலவற்றின் விலைகளும் அதிகரிக்கப்படவுள்ளன. இவ்வாறாக அரசாங்கம் வீண் செலவுகளை செய்து அதனை ஈடுசெய்வதற்காக இப்படி வரிகளை அறவிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனால் அநியாய வரிகளை உடனடியாக குறைக்க வேண்டும். என அவர் தெரிவித்துள்ளார்.

## இரணைதீவு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றையதினம் இரணைதீவுக்கு மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் பி.சுரேஸ், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்.ராஜபக்ஸ, கடற்படை தளபதி ரியர் அட்மிரல் எஸ்.எஸ். ரணசிங்க தலைமையிலான குழுவினர் விஜயம் செய்தனர். இவர்களுடன் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பூநகரி பிரதேச செயலாளர் கிருஸ்னேந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் மற்றும் யாழ் மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கனகராசா ஆகியோரும் சென்றிருந்தனர்.

அங்கு சென்ற மேற்படி குழுவினர் பொது மக்களை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் அவர்கள் தங்களின் சொந்த நிலத்தில் குடியமர்வதற்கான அறிவிப்பையும் வெளியிட்டனர். ஏற்கனவே மக்களின் காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 190 குடும்பங்கள் மீள்குடியேற்றப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இரணைதீவில் கடற்படையினர் எட்டு ஏக்கர் நிலத்தில் தொடர்ந்தும் இருப்பார்கள் என்றும் இவர்கள் நாட்டின் பாதுகாப்பு, போதைப் பொருள் கடத்தலை கட்டுப்படுத்தல், இரணைதீவு மக்களின் பாதுகாப்பு என்பவற்றை கருத்தில் எடுத்து தொடர்ந்தும் அங்கிருப்பார்கள் என்றும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை இரணைதீவு மக்களுக்கான அடிப்படை தேவைகளை மாவட்டச் செயலகம் ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளது என கிளிநொச்சி அரச அதிபர் குறிப்பிட்டார்.

## நினைவேந்தலுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அழைப்புவிடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முரண்பாடுகளின்றி சகல மக்களையும் ஒன்றிணைத்து உணர்வுபூர்மாகக் கடைப்பிடிப்பதே அனைவரதும் எதிர்பார்ப்பும் விருப்பமுமாகும்.

முரண்பட்ட எம்மவர், நிகழ்வின் தாற்பரியம் உணர்ந்து ஒன்றிணைந்து, உயிரிழந்தோருக்கு அஞ்சலியையும் உறவுகளை இழந்தோருக்கு ஆறுதலையும் தேறுதலையும் வழங்க முன்வந்துள்ளனர்.

இதனடிப்படையில் தமிழ் மக்கள் எங்கிருப்பினும் எமது இனத்துக்கு 2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி ஏற்பட்ட பெரும் மனித அழிவை இந்த வருடமும் அதே நாளில் நினைவு கொள்ள முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

பின்வரும் நடவடிக்கைகளை மக்களிடமிருந்து நாம் எதிர்பார்க்கின்றோம்.

2018ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு முள்ளிவாய்க்காலில் பொதுச் சுடர் ஏற்றப்படவிருக்கும் நேரத்தில் இறந்த எமது உறவுகளின் சார்பாக எமது மக்கள் எங்கிருந்தாலும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தவும்.

அதே நேரம் ஆலயங்களில் பூசை வழிபாடுகளிலும் எமது மக்கள் ஈடுபடலாம். அகலமரணமடைந்த எமது உறவுகளின் ஆத்மாக்கள் சாந்தியடைப் பிரார்த்திக்கலாம்.

எமது சகோதர சகோதரிகள் அன்றைய தினம் மதியம் 12 மணிவரை தமது கடைகளை அடைத்து தமது உணர்வுகளையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்துவதை நாம் வரவேற்கின்றோம்.

அன்றைய தினம் துக்க தினமாகக் கடைப்பிடிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கருத்திற்கொண்டு நாம் அன்றைய நாள் நிகழ்வுகளில் ஈடுபடுவது பொருத்தமானது. பாடசாலைகள், அலுவலகங்களில் 2 நிமிட மௌன அஞ்சலியை முற்பகல் 11 மணிக்கு நிகழ்த்த வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். தனிப்பட்டவர்கள் கைகளில் கறுப்புப் பட்டியணிந்து தமது துயரத்தை வெளிப்படுத்தலாம். பல்கலைக்கழக மாணவர்கள் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திலிருந்து முள்ளிவாய்க்கால் வரையான மோட்டார் சைக்கிள் பவனி ஒன்றை காலை 7 மணிக்கு ஆரம்பிக்கின்றனர். அவர்களும் முற்பகல் 11 மணிக்கு சுடரேற்றும் நிகழ்வில் பங்கேற்பர் - என்றுள்ளது.

## வேற்றுமைகளை.. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுமையான தாக்குதலே முள்ளிவாய்க்கால் பேரவலம்.

இந்தத் தாக்குதலில் வயது வேறுபாடின்றி பல்லாயிரம் உயிர்கள் மடிந்தன. பச்சிளம் குழந்தைகள் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டனர். இவர்கள் அனைவரினதும் ஆத்மா சாந்திபெற வேண்டியும், நடைபெற்ற இக்கொடுமையான செயலுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்று முன்னெடுக்கப்படும் அஞ்சலி நிகழ்வுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முழுமையான ஆதரவை வழங்குகின்றது.

அன்றைய நாளில் வேற்றுமைகளை மறந்து அனைவரையும் கலந்துகொள்ளுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## பஸ் கட்டணமும்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட காரணத்தினால் பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்று பஸ் சங்கங்கள் கோரிக்கை விடுத்திருந்தன.

அதன்படி பஸ் கட்டணத்தை அதிகரிப்பது சம்பந்தமாக தீர்மானம் எடுப்பதற்கு நேற்றுமுன்தினம் மாலை கூடிய நிபுணத்துவ குழுவினால் தயாரிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரம் நேற்றைய அமைச்சரவை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தநிலையிலேயே இந்த கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தனியார் பஸ்கள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக அனைத்து மாகாண பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கமும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளது.

இதே கோரிக்கையை முன்னிறுத்தியே அவர்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தை அறிவித்துள்ளனர்.

## நினைவேந்தலை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்த பௌத்த தகவல் கேந்திர நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அங்குலுகல்லே ஸ்ரீ ஜீனாநந்த தேரர், இந்த விடயத்தில் உடன் நடவடிக்கை தேவை என குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் போது உயிரிழந்த தங்களது உறவினர்களை நினைவு கூரும் நோக்கிலேயே முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்துவதாக தமிழ் மக்கள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## திருத்தம்

நேற்றைய பதிப்பில் “தமிழரசுக்கட்சி தன்னிச்சை முடிவு” என்ற செய்தியில் “புளொட்” என்பதற்கு பதிலாக “ரெலோ” என வெளிவந்து விட்டது. தவறுக்கு வருந்துகிறோம். அதனை மாற்றி வாசிக்குமாறு தயை கூர்ந்து கேட்டுக்கொள்கிறோம்.

# எழுத்துச் சித்தர் பாலகுமாரன் காலமானார்!



சென்னை, மே 16

தமிழ் எழுத்துலகின் புகழ்பெற்ற எழுத்தாளரும், வசன கர்த்தாவுமாகிய பாலகுமாரன் தனது 71 ஆவது வயதில் நேற்று மாரடைப்பால் காலமானார்.

கடும் மூச்சுத்திணறல் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையிலேயே, இவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில், திருக்காட்டுப்பள்ளி வட்டத்தில் உள்ள பழமார்நேரி என்னும் சிற்றூரில் தமிழாசிரியர் சுலோசனா என்பவருக்கு மகனாகப் பிறந்த பாலகுமாரன், பதினோராம் வகுப்பு வரையே பயின்றார்.

பாலகுமாரன் எழுத்துத் துறையில் நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், இருநூறுக்கும் மேற்பட்ட நாவல்களையும், சில கவிதைகளையும் எழுதியுள்ளார்.

பாலகுமாரன் எழுதிய நாவல்களில் மெர்க்குரி பூக்கள், இரும்புக் குதிரைகள் உள்ளிட்டவை மிகவும் பிரபலம் வாய்ந்தவை. எழுத்துத்துறை, திரைத்துறை போன்றவற்றில் பல்வேறு விருதுகளையும் அவர் பெற்றுள்ளார்.

திரைப்படத்துறையில் 'நாயகன்', 'குணா', 'ஜென்டில் மேன்' உள்ளிட்ட பல படங்களில் வசனகர்த்தாவாகவும் அவர் பணியாற்றி உள்ளார்.

'எழுத்துச் சித்தர்' எனச் சிறப்பாக அழைக்கப்பட்ட பாலகுமாரனின் இந்த திடீர் மறைவு இலக்கிய உலகில் அனைவரையும் பெரும் சோகத்தில் ஆழ்த்தி உள்ளது. (ஆ)

# பிரபுதேவாவுடன் திருமணம்?

## நிகிஷா படேல் விளக்கம்



சென்னை, மே 16

பிரபுதேவாவைத் திருமணம் செய்யப் போவதாக வெளியான செய்திகள் உண்மையல்ல என்று நடிகை நிகிஷா படேல் விளக்கம் அளித்துள்ளார்.

பவன் கல்யாணின் ஜோடியாக புலி என்ற தெலுங்குப் படத்தில் 2010 ஆம் ஆண்டு அறிமுகமானவர் நிகிஷா படேல். தமிழில் 'தலைவன்', 'என்னமோ ஏதோ', 'கரையோரம்', 'நாரதன்', '7 நாட்கள்' போன்ற படங்களில் நடித்துள்ளார். கஸ்தூரி ராஜாவின் இயக்கத்தில் 'பாண்டி முனி' என்ற படத்தில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில், "பிரபுதேவாவை எனக்கு மிகவும் பிடிக்கும். அவரைத் திருமணம் செய்ய விருப்பப்படுகிறேன்." என நிகிஷா படேல் சமீபத்தில் கூறியதாகச் செய்திகள் வெளியாகின.

"கடந்த சில நாட்களாகப் பிரபுதேவாவைத் திருமணம் செய்வது குறித்த ஊடகங்களின் கேள்விகளால் சோர்வடைந்துள்ளேன். இது குறித்து விளக்கம் அளிக்கிறேன். அந்தச் செய்தியில் உண்மையில்லை. இந்தச் செய்தி தவறாக அர்த்தம் கொள்ளப்பட்டுள்ளது. நான் என் பணிகளில் மும்முரமாக உள்ளேன்." என அவர் தெரிவித்துள்ளார். (ஆ)



# இஸ்ரேல் படை வெறியாட்டம் 55 பலஸ்தீனர்கள் உயிரிழப்பு

ரமல்லா, மே 16

காஸா எல்லைப்பகுதியில் இஸ்ரேலியப் படைகள் நடத்திய ஆவேசத் தாக்குதலில், 55 பேர் உயிரிழந்துள்ளனர்.

கிழக்கு ஜெருசலேம் நகரில் நேற்றுமுன்தினம் அமெரிக்கத் தூதரகம் திறக்கப்பட்டது. இந்த நிலையில், காஸா எல்லைப்பகுதியில் இஸ்ரேலியப் படைகள் இந்தத் தாக்குதலை நடத்தி உள்ளனர்.

1967 ஆம் ஆண்டுவரை ஜோர்தான் வசமிருந்த கிழக்கு ஜெருசலேம் நகரைக் கைப்பற்றிய இஸ்ரேல் அரசு, கடந்த 1980 ஆம் ஆண்டில் இந்த நகரை தங்கள் நாட்டுடன் இணைத்துக் கொண்டது. ஜெருசலேம் நகரின் கிழக்குப் பகுதியில் சுமார் 3 லட்சத்து 50 ஆயிரம் பலஸ்தீனியர்கள் வசித்து வருகின்றனர். இந்தப் பகுதியில் இஸ்ரேல் அரசு அத்துமீறலாக அமைத்த வசிப்பிடங்களில் சுமார் 2 லட்சம் யூத இனத்தவர்கள் வாழ்கின்றனர்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான காஸா என்ற பகுதியைக் கைப்பற்றியுள்ள ஹமாஸ் போராளிகள், ஜெருசலேம் நகரை இஸ்ரேலின் பிடியில் இருந்து மீட்பதற்காக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 2005ஆம் ஆண்டுவரை காஸா முனையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த இஸ்ரேல் அரசு, பின்னர் அங்கிருந்து படைகளை விலக்கிக் கொண்டாலும், இங்குள்ள கடலோரப் பகுதிகளில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

இதற்கிடையில் இஸ்ரேல்நாட்டின் தலைநகரான டெல் அவிவ் நகரில் இயங்கிவந்த அமெரிக்கத் தலைமைத் தூதரகத்தை கிழக்கு ஜெருசலேம் நகருக்கு மாற்ற உத்தரவிட்ட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இஸ்ரேல் நாட்டின் புதிய தலைநகராகக் கிழக்கு ஜெருசலேம் நகரை அங்கீகரிப்பதாக சமீபத்தில் அறிவித்தார். இதனால், மத்திய கிழக்குப் பகுதியில் பதற்றம் தொற்றியுள்ளது. குறிப்பாக, இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையே உச்சகட்ட மோதல் வெடிக்கும் சூழல் உருவாகி உள்ளது.

இஸ்ரேல் ஆக்கிரமித்து வைத்துள்ள தங்களது தாய்மண்ணில் குடியேற வேண்டும் என்று வலியுறுத்தி காஸா முனையில் தங்கியுள்ள பலஸ்தீனிய மக்கள் கடந்த ஆறு வாரங்களாக காஸா எல்லைப்பகுதியில் வெள்ளிக்கிழமை தோறும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் கிழக்கு ஜெருசலேம் நகரில் அமெரிக்கத் தூதரகம் திறக்கப்பட்டது. இதனை அடுத்து, காஸா எல்லைப்பகுதியில் சுமார் 35 ஆயிரம் பேர் குவிந்து உச்சக்கட்ட போராட்டத்தில் ஈடுபட்டனர். கம்பி வேலியை வெட்டி இஸ்ரேலுக்குள் ஊடுருவ முயன்றதால் பலஸ்தீனத்தைச் சேர்ந்த போராட்டக்காரர்கள் மீது இஸ்ரேல் இராணுவம் சரமாரியாகத் துப்பாக்கிச்சூடு நடத்தியது. இதில் குழந்தைகள் உள்பட 55 பேர் கொல்லப்பட்டனர். ஆயிரத்து 204 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் 116 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என காஸா சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ஆ)

# தேசத் துரோக வழக்கு



லாகூர், மே 16

மும்பைத் தாக்குதல் பற்றி கருத்து தெரிவித்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்மீது, தேசத் துரோகச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தானில் இருந்தவாறு செயற்படும் லஷ்கர் இ-தொய்பா பயங்கரவாதிகள், கடந்த 2008ஆம் ஆண்டு மும்பை நகருக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர். இதில், சில வெளிநாட்டவர்கள் உட்பட 150 க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் குறித்து கடந்த சனிக்கிழமை கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், "பாகிஸ்தானில் பயங்கரவாத அமைப்புகள் செயற்பாட்டில் இருக்கின்றன. அவர்கள் எல்லை தாண்டிச் சென்று, மும்பையில் தாக்குதல் நடத்தி மக்களில் 150 பேரைக் கொல்ல நாம் அனுமதித்து இருக்கலாமா?" என்று கேள்வி எழுப்பி இருந்தார்.

அவருடைய இந்தக் கருத்து பாகிஸ்தானில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த நிலையில், நவாஸ் ஷெரீப்பின் கருத்து தேசத்துக்கு துரோகம் விளைவிப்பதாக உள்ளது என்று கூறி லாகூர் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி அப்தாப் விர்க் நேற்றுமுன்தினம் மனுதாக்கல் செய்தார். (ஆ)

# மரப்பாலம் உடைந்து 7 மாணவர்கள் சாவு! புகைப்படம் எடுக்கும்போது சோகம்

இஸ்லாமாபாத், மே 16

பாகிஸ்தானில் மரப்பாலம் உடைந்து விழுந்ததில், அதில் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்த மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானில் நீலம் பள்ளத்தாக்கு என்ற மாவட்டம் உள்ளது. இங்கு மிகப் பெரிய ஆறு ஓடுகிறது. இந்த ஆற்றைக் கடந்து செல்வதற்காக ஆற்றின் நடுவே மரத்தினாலான தொங்கு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த இந்தப் பாலத்தில் ஒரே சமயத்தில் அதிகபட்சமாக 4 பேர் மட்டுமே செல்ல முடியும்.

இதுதொடர்பாக அங்கு எச்சரிக்கைப் பலகைகளும் வைக்கப்பட்டிருந்தன. ஆனாலும், இங்கு சுற்றுலா வரும் பயணிகள் இதனைப் பொருட்படுத்தாமல் மரப்பாலத்தில் கூட்டம் கூட்டமாகச் செல்வதை வாடிக்கையாகக் கொண்டிருந்தனர். இந்த நிலையில், பைசலாபாத் மற்றும் லாகூரில் இருந்து 2 தனியார் மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த 25 க்கும் மேற்பட்ட மாணவர்கள் நேற்றுமுன்தினம் நீலம் பள்ளத்தாக்குப் பகுதிக்கு சுற்றுலா சென்றனர்.

அப்போது அவர்கள் அனைவரும் ஆற்றின் நடுவே இருந்த மரப்பாலத்தில் ஏறி நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தனர். இந்த நிலையில், திடீரென அந்த மரப்பாலம் உடைந்து ஆற்றில் விழுந்தது. இதன்போது, பாலத்தின் மீது நின்றுகொண்டிருந்த மாணவர்கள் அனைவரும் நீரில் மூழ்கினர். 11 மாணவர்கள் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். மேலும், 9 மாணவர்கள் மாயமாகி உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஆ)



# எவரெஸ்ட்டில் ஏறி அவுஸ்ரேலியர் சாதனை

சிட்னி, மே 16

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த ஸ்டீவ் பிளெய்ன் என்பவர், எவரெஸ்ட் சிகரம் உள்ளிட்ட உலகின் உயரமான ஏழு சிகரங்களை 117 நாட்களில் அடைந்து புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளார்.

ஸ்டீவ் பிளெய்ன் தனது குழுவில் உள்ள இருவரோடு உலகின் உயரமான (8,848 மீற்றர்) எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை கடந்த திங்கட்கிழமை அடைந்தார். இதற்கு முன்பு உலகின் உயரமான 6 சிகரங்களை ஏறிய அவர் 7 ஆவதாக எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தார். 117 நாட்களில் ஸ்டீவ் பிளெய்ன் இந்தப் புதிய சாதனையை செய்துள்ளார். ஏற்கெனவே கடந்த ஆண்டு போலந்து நாட்டைச் சேர்ந்த ஜானுஸ் கோச்சன்ஸ்கி என்பவர் 126 நாட்களில் ஏழு சிகரங்களை அடைந்து சாதனை செய்திருந்தார். அதை இப்போது ஸ்டீவ் பிளெய்ன் முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# தோல்வியுடன் ஓய்வு



இத்தாலி, மே 16

இத்தாலியைச் சேர்ந்த 35 வயதான ரொபேர்ட்டா வின்சி டென்னிஸ் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார்.

இத்தாலியைச் சேர்ந்த டென்னிஸ் வீராங்கனையான ரொபேர்ட்டா வின்சி (வயது-35), இரட்டையர் பிரிவில் ஐந்து தடவைகள் கிராண்ட் ஸ்லாம் சம்பியன் பட்டங்களை வென்றவர். 10 சம்பியன் பட்டங்களை வென்றுள்ள இவர், அவுஸ்ரேலியா ஓபனில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்து சம்பியன் பட்டத்தை இழந்தார்.

தற்போது இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரோடு ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார். இந்நிலையில் வின்சி முதல் சுற்றில் அலெக்ஸாண்ட்ரா குருனிக்கை எதிர் கொண்டார். இதில் 6-2, 0-6, 3-6 என தோல்வியடைந்து சோகத்துடன் விடைபெற்றார்.

# அயர்லாந்துடனான டெஸ்ட்: வென்றது பாகிஸ்தான்



அயர்லாந்து, மே 16

அயர்லாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றது.

அயர்லாந்து அணி டெஸ்ட் போட்டியில் விளையாடும் அந்தஸ்தை கடந்த வருடம் பெற்றது. அதன்பின் முதல் டெஸ்டை பாகிஸ்தானுக்கு எதிராக விளையாட முடிவு செய்தது. வரலாற்று சிறப்புமிக்க இந்த டெஸ்ட் கடந்த 11ஆம் திகதி டப்ளினில் தொடங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 310 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் முதல் இன்னிங்ஸை டிக்ளேர் செய்தது.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸை ஆடிய அயர்லாந்து 130 ஓட்டங்களுள் சுருண்டது. இதனால், 'பலோ-ஒன்' முறையில் அயர்லாந்து 2ஆவது இன்னிங்ஸைத் தொடங்கியது.

முதல் இன்னிங்ஸில் சொதப்பிய அயர்லாந்து வீரர்கள் 2ஆவது இன்னிங்ஸில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். தொடக்க வீரர் ஜாய்ஸ் 43 ஓட்டங்களும், போர்ட்டர்பீல்ட் 32 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அதன்பின் வந்த பால்பிர்னி (0), என் ஓ பிரைன் (18), ஸ்டிர்லிங் (11) அடுத்தடுத்து ஆட்டமிழக்க அயர்லாந்து அணி திணறியது. அதன்பின் வந்த கே ஓ பிரைன் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவருக்கு தாம்ப்சன் ஆதரவு கொடுத்து ஆடினார். இதனால் கே ஓ பிரைன் 186 பந்துகளில் 10 பவுண்டரிகளுடன் சதம் அடித்தார்.

கிரிக்கெட் வரலாற்றில் முதன்முறையாக களம் இறங்கிய அயர்லாந்து அணியின் கே ஓ பிரைன் சதம் அடித்து சாதனைப் படைத்தார். இவரது சதத்தால் அயர்லாந்து நேற்றுமுன்தினம் 2ஆவது நாள் ஆட்ட முடிவில் 122 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 319 ஓட்டங்களை எடுத்தது. கே ஓ பிரைன் 118 ஓட்டங்களுடனும், தாம்சன் 53 ஓட்டங்களுடனும் களத்தில் நின்றனர்.

இந்நிலையில், நேற்று மீண்டும் ஆடிய அயர்லாந்து அணி, கே ஓ பிரைனை வந்த வேகத்தில் பறிகொடுத்தது. தாம்சனும் அப்படியே வெளியேற, அயர்லாந்து அணி சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்து, 339 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர், 160 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, இமான் உல் ஹக் (70), பபர் அஸாம் (59) ஆகியோரின் அரைச்சதங்களின் உதவியுடன் 05 விக்கெட்டுகள் இழப்புக்கு 160 ஓட்டங்களைச் சேர்த்து வெற்றியைத் தனதாக்கியது. (ஐ)




# கிடைத்தது இடம்

பிரேசில், மே 16

நெய்மர் காயம் காரணமாக இந்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணத்தில் விளையாடுவதில் சிக்கல் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவருக்கு விளையாடு வதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது.

பிரேசில் கால்பந்தாட்ட அணியின் தலைசிறந்த வீரர் நெய்மர். இவர் பிரான்ஸில் நடைபெறும் லீக்-1 கால்பந்து தொடரில் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணிக்காக விளையாடி வருகிறார். கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற லீக் போட்டியின்போது நெய்மருக்குக் காலில் காயம் ஏற்பட்டது. இதற்கு சத்திரசிகிச்சை செய்து கொண்டார். இதனால் கடந்த மூன்று மாதங்களாக விளையாடாமல் இருந்தார்.

தற்போதுதான் பாரிஸ் சென்று பிஎஸ்ஜி அணியுடன் இணைந்துள்ளார். இந்நிலையில், ரஷ்யாவில் அடுத்த மாதம் தொடங்கவுள்ள உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடருக்கான பிரேசில் அணியில் நெய்மர் இடம்பிடித்துள்ளார்.

23 பேர் கொண்ட பிரேசில் அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் விவரம்:-

அலிஸ்சன், கேசியோ, எடர்சன், டேனிலோ, பாக்னர், பார்சிலோ, பிலிப்பே லூயிஸ், மிரண்டா, மார்குயின் ஹோஸ், தியாகோ சில்வா, ஜேரோமெல், கேஸ்மிரோ, பெர்னாண்டின்கோ, பவுலின்கோ, ரெனாடோ ஆகஸ்டோ, ப்ரெட், பிலிப்பே கவுட்டின்கோ, வில்லியன், நெய்மர், கேப்ரியல் ஜீசஸ், ரொபெர்ட்டோ பிர்மினோ, டக்ளஸ் கோஸ்டா, டைசன். (ஐ)

# சென்னைக்கு மெட்டுப் போட்ட இங்கிலாந்து வேகப்புயல்

சென்னை, மே 16

சென்னை அணியிலிருந்து பாதியில் வெளியேறி இங்கிலாந்து சென்ற மார்க் வுட், தற்போது சென்னை அணிக்கும், அம்பத்தி ராயுடுவுக்கும் சமர்ப்பணமாக பாடல் ஒன்றைப் பாடியுள்ளார்.

இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் மார்க் வுட், பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாட இருந்ததால், சென்னை அணி நிர்வாகம் முன்னதாகவே அவரை விடுவித்தது. அதனைத் தொடர்ந்து, இங்கிலாந்து சென்ற மார்க் வுட், சென்னை அணியின் ஆட்டங்களைப் பார்த்து ஆதரவளிப்பதாகத் தெரிவித்திருந்தார்.



இந்நிலையில், சன்ரைசர்ஸ் அணியுடனான ஆட்டத்தில் சென்னை அணி வெற்றி பெற சதம் விளாசிய அம்பத்தி ராயுடுவைப் பாராட்டியும், சென்னை அணியை நினைவு கூர்ந்தும் தன் நண்பர்களுடன் இணைந்து மார்க் வுட் பாடல் ஒன்றைப் பாடியுள்ளார். இதனை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்திலும் பதிவிட்டுள்ளார்.

மேலும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் இந்த பாடல் வீடியோவை தனது பேஸ்புக் மற்றும் ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளது. இந்நிலையில், சென்னை அணி ரசிகர்கள் பலரும் மார்க் வுட்டைப் பாராட்டிப் பதிவிட்டு வருகிறார்கள். (ஐ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 16.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.